# EASTERN UNIVERSITY SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## (EXTERNAL DEGREES)

LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

### First Examination in Bachelor of Business Administration 2008/2009

### And

### First Examination in Bachelor of Economics 2009/2010 (May – June 2013) (Proper/Repeat)

## EXB/EXE 1024 PRINCIPLES OF MANAGEMENT

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. நேரம் - 3 மணித்தியாலங்கள்

---

01. a) "முகாமையாளர் எனப்படுபவர் பிறரை வழிநடத்தி அவர்கள் மூலம் கடமைகளை நிறைவேற்றி அதன் மூலம் நிறுவனத்தின் நோக்கம் அல்லது இலக்கினை அடைவதற்காக உழைப்பவராவர்."

இக்கூற்றின் அடிப்படையில் வெவ்வேறு மட்டங்களைச் சேர்ந்த முகாமையாளர்களுக்கு வேண்டப்படும் தேர்ச்சித் திறன்களை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

b) "முகாமையாளர்கள் நிறுவனத்தின் இலக்கினை அடையும் பொருட்டு பல்வேறு வகையான தடைகளை வெற்றிகொள்ளல் வேண்டும்." பொதுவாக முகாமையாளர் ஒருவர் எதிர்நோக்கும் பிரதான முகாமைத்துவ சவால்களை அடையாளம் கண்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

c) "முகாமைத்துவமானது நிறுவனத்தின் இலக்கினை அடைவதுடன் மட்டுமன்றி சமூகத்தின் மீது பாரிய பொறுப்பினை கொண்டுள்ளதால் நிறுவனத்திற்கு சமூகப்பொறுப்பும் உண்டு என கூறப்படுகின்றது"

இக்கூற்றின் அடிப்படையில் நிறுவனத்திற்கான பிரதான சமூகப்பொறுபுக்களை அடையாளம் கண்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. a) இன்று உலகின் முன்னணி கைத்தொழில் நாடுகளில் ஒன்றாக ஜப்பான் காணப்படுகின்றது. ஜப்பானிய நிறுவனங்களின் சிறந்த செயற்பாடடிற்கு காரணம் சிறந்த முகாமைத்துவமே ஆகும். ஜப்பானிய முகாமைத்துவத்தில் காணப்படும் சிறப்பு அம்சங்களை அடையாளம் கண்டு விளக்குக.

(08 புள்ளிகள்)

b) "நிறுவனமொன்றின் சூழல் காரணிகள் ஒரு நிறுவனத்திற்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமையலாம். இதனை ஆய்வு செய்ய SWOT ஆய்வானது பாரிய பங்கு வகிக்கின்றது". இக்கூற்றின் அடிப்படையில் SWOT ஆய்வினை விளக்குவதுடன் நிறுவனம் பெறக்கூடிய பயன்களையும் தருக.

(08 புள்ளிகள்)

c) "திட்டமிடல் எனப்படுவது நிறுவனத்தின் நோக்கத்தினை (Objective) வரையறுத்து அதனை அடையும் பொருட்டு செயற்பாடுகளைத் தீர்மானித்து அவற்றினை ஒன்றிணைத்துக் கொள்வதனைக் குறிக்கின்றது"

பொதுவாக நிறுவனத்தின் நோக்கம் (Objective) எத்தகைய பண்புகளுடன் காணப்பட வேண்டும் என்பதை பொருத்தமான உதாரணத்துடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 22 புள்ளிகள்)

03. a) பொதுவாக நிறுவன வெற்றிக்கு பிரதானமாக காணப்படும் திட்டமிடலின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(06 புள்ளிகள்)

b) "சிறந்த திட்டமிடல் சில பண்புகளைக் கொண்டிருத்தல் அவசியமானதாகும்". அத்தகைய பண்புகளைக் குறித்து விளக்குக.

(06 புள்ளிகள்)

c) ஒழுங்கமைத்தல் நடவடிக்கையின் பிரதான செயற்பாடுகளை விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

04. a) "நிறுவனம் ஒன்றில் ஒழுங்கமைத்தலை மேற்கொள்ளும் போது பல்வேறு தத்துவங்கள் கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்". அவ்வாறான ஒழுங்கமைத்தல் தத்துவத்துவங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

b) "ஊழியரிடல் எனப்படுவது மனிதவள திட்டமிடல், ஆட்சேர்ப்பு, தெரிவு, பயிற்சி அளித்தல், செயல்திறனை மதிப்பிடல், விருத்தி செய்தல் ஆகியவற்றினைக் கொண்ட முகாமைத்துவச் செயற்பாடுகளைக் குறிக்கின்றது."

ஒரு நிறுவனம் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள கையாளும் பிரதான வகைகளை அடையாளம் கண்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

c) சிறந்த தலைவர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய வலுக்களை (Power) அடையாளம் கண்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. a) திட்டமிடலும் கட்டுப்படுத்தலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய முகாமைத்துவ செயற்பாடுகளாகும். கட்டுப்படுத்தல் எனப்படுவது, திட்டமிட்டபடி கருமங்கள் மேற்கொள்ளப்படுகின்றதா என உறுதிப்படுத்தி கொள்வதனைக் குறிக்கும். இக்கட்டுப்படுத்தலானது ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பல படிமுறைகளைக் கொண்டுள்ளது.

இக்கூற்றின் அடிப்படையில் கட்டுப்படுத்தல் செயல் முறையில் காணப்படும் பிரதான படிமுறைகளை விளக்குக.

(07 புள்ளிகள்)

b) ஓர் நிறுவனம் மிகையான அல்லது குறைவான கட்டுப்பாட்டினை மேற்கொள்கின்றபோது ஏற்படக்கூடிய பாதிப்புக்களை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

c) ஆபிரகாம் H. மாஸ்லோவின் படிமுறை அமைப்பு தேவைக்கேட்பாட்டினை விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக

(07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)